

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

## ஜெயமே ஜெயமென, எழுந்தார் இறைவன்!

**அன்று** பெத்தானியா ஊர் மரியாள், வியாதிப்பட்ட தன் சகோதரன் லாசருக்காக விண்ணப்பம் செய்து, இயேசு புறப்பட்டு வந்து சேர 4- நாட்கள் ஆகிவிட்டதே! அவனும் மரித்து, கல்லறையில் வைக்கப்பட்டான்! மரியாள் ஓடி வந்து ‘‘நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டானே!’’ என அங்கலாய்த்தாள்! (யோவான் 11:3,32).

**இன்றோ,** அவர் மரணத்தை வென்று, உயிர்த்தெழுந்தார்! இயேசுவை ‘விசுவாசித்து’ ஜெபித்திடும் ‘வியாதிப்பட்ட உங்கள் அன்பிற்குரியவர்களை’ 4-நொடியில் வந்து சுகமளிப்பார்! புயல்வீசும் உங்கள் சூழ்நிலைகளிலிருந்து உங்களை காத்திட, இனி கடலின்மேல் நடந்து வரவேண்டியதில்லை! உங்கள் ஜெபம் கேட்டு, உடனே அமைதிப்படுத்துவார்! ஏன் தெரியுமா? நம் இரட்சகர் ‘ஜெயமே ஜெயமென’ எழுந்தார்! பூட்டிய வீட்டிலிருந்து ஜெபித்தாலும், உடனே கேட்டு சஞ்சலம் நீக்குவார்! ஏன் தெரியுமா? எழுந்தார் இறைவன்! அல்லேலூயா.

*-tr*

பெட்டகம் 40 | ஏப்ரல் 2024 | பரல்கள் 4




## சபை செல்லும் நோக்கம் இழந்த கிறிஸ்தவர்கள்!

இன்றைய கிறிஸ்தவ ஜனங்கள் 'திரள்கூட்டட்தை' பரவசமாய் எண்ணுகிறார்கள். ஆகவேதான், திரள்கூட்டத்தைப் பார்த்து, தன்னைப் பின்பற்றி வரும்படியான இடுக்கமான வாசலை இயேசு காண்பித்தவுடன், அநேகர் பின்தங்கி சென்றுவிட்டார்கள்!

இதுபோன்றவர்கள், தாங்கள் ஏன் சபை ஆராதனைக்குச் செல்லுகிறோம் என்றுகூட அறியாதிருக்கிறார்கள். தாங்கள் சபை ஆராதனைக்குச் செல்லவில்லையென்றால் 'அது தவறு' என்ற எண்ணத்தையே பெற்றிருக்கிறார்கள். ஒரு நிலைக் கதவின் 'கீலின் மேல்' நின்று ஆடிக்கொண்டிருக்கும் கதவைப்போலவே, எந்த நோக்கமும் இல்லாமல் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களின் ஆராதனை, ஆத்துமத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. இதுபோன்றவர்களே "பிரசங்கம் சுருக்கமாய் இருந்தால் மகிழ்ச்சி அடைகிறார்கள்" இல்லையென்றால், அது அவர்களுக்கு சலிப்பை ஏற்படுத்துகிறது.

சீக்கிரத்தில் கூட்டம் முடிந்து, ஆராதனைக்கு கூடி வந்த ஜனங்களோடு வீட்டு விஷயம், வியாபார விஷயம், அரசியல் விஷயம், சபையை புறங்கூறுதல்..... போன்றவைகளை அளவளாவி பேசி செல்லுவதற்கு இவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால், ஆண்டவராகிய இயேசுவிடம் நெருங்கிச் செல்லும் பாக்கியத்தை, சபைக் கூட்டத்தில் இவர்கள் பெற்றதேயில்லை!

*-Ed*

### 2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா **ரூ.170**/- தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஏப்ரல் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘பதில் தருவார்’ என்ற நிச்சயமே, ஜெபத்தின் ஜெயம்!

*ஜெபம் கர்த்தருடைய யுத்தம், நாமாக நிறுத்தக்கூடாது*

ஜெபத்தின் வலிமை “சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்” என்ற நீடித்த பொறுமையிலிருக்கிறது (லூக்கா 18:1). எவ்வளவு பெரிய சோதனையாயிருந்தாலும், அதனிமித்தம் ஜெபத்தில் தளர்வடைவது, நம் நீடித்த பொறுமைக்கு ஏற்பட்ட தோல்வியேயாகும். அந்த தோல்வி எப்படியென்றால், ‘சில காரியங்களைக் குறித்து’ ஒரு நாள் அல்லது ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் ஜெபித்தும் அதற்கு பதில் கிடைக்கவில்லையென்றால், பொறுமையிழந்து மனச்சோர்வில் அமர்ந்து விடுகிறார்கள்! இவ்வாறாக இருக்கும் யாராயிருந்தாலும், தங்கள் ஆத்துமாவுக்கு மிகப்பெரும் தீங்கு செய்து விடுகிறார்கள். இந்த ஆத்தும தவறு பற்றிப் படர்ந்து “**எதை ஆரம்பித்தாலும் அதை நிறைவேற்றாத**” கொடிய வலைக்குள் சிக்க வைத்து விடுகிறது! இதுபோன்ற ஜீவியத்தை கொண்ட ஒரு நபர் ‘தோல்வியை தங்கள் பழக்கமாய்’ மாற்றிக் கொள்கிறார்கள்!

> “**இதற்கு மாறாக, இடைவிடாத பொறுமையிலிருந்த ஜெபத்தின் மூலம், முடிவில் பதிலை கண்டடைந்தவன் ‘ஜெயமே ஜெப ஜீவியத்தின் பழக்கமாய்’ மறுரூபம் பெற்றார்கள்!**

*ஜெபத்தில் ஏற்படும் சோர்வு, தோல்வி என்பதை அறிந்து கொள்ளுங்கள்! அதுஏனெனில், அந்த தோல்வி உங்கள் மனச்சோர்வில் ஆரம்பித்து, ஜெபத்தின் மீது கொண்ட அவிசுவாசத்தின் குழிக்குள் உங்களைத் தள்ளி விடுகிறது. அல்லது உங்களுக்கு வர வேண்டிய “எல்லா ஜெயத்திற்கும் தோல்வியை” வழி வகுத்து விட்டது!*

“எவ்வளவு காலம்தான் ஜெபிப்பது?” என அவ்வப்போது சிலர் கேட்பதுண்டு. அதற்கு ஒரே ஒரு விடைதான் உண்டு: **1.** உங்கள் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் வரை ஜெபிக்கலாம். **2.** தேவன் பதில் தருவார் என்ற நிச்சயத்தை உங்கள் இருதயத்தில் பெற்றவுடன் ஜெபத்தை நிறுத்தலாம். ஏனெனில், ஜெபம் என்ற

சிலாக்கியம், தேவனை நோக்கி கூப்பிடுவது மாத்திரமல்ல, சாத்தானை எதிர்த்து நின்றிடும் **யுத்தமாகவும்** இருக்கிறது!

நம்முடைய ஜெபத்தைக் கொண்டு சாத்தானை ஜெயிப்பதற்கு தேவன் முற்படுவதால், அந்தப் போரை நாமாக நிறுத்த முற்படாமல், கர்த்தர் எப்போது நிறுத்தச் சொல்கிறாரோ, அப்போது மாத்திரமே நிறுத்துவதற்கு துணிய வேண்டும்!

> “ **ஆகவேதான், ஜெபத்திற்கு பதில் வரும் வரை அல்லது கர்த்தர் பதில் தருவார் என்ற உறுதியைப் பெறும் வரை, நாமாக ஜெபத்தை நிறுத்துவதற்கு துணிய கூடாது! என்ற உண்மையை விளங்கிக் கொள்கிறோம்!**

ஒன்று, பதில் வந்ததை நாம் ‘காண்கிறபடியால்’ ஜெபத்தை நிறுத்திக் கொள்கிறோம்! மற்றொன்று, பதில் வருமென நாம் நிச்சயித்தபடியால், நிறுத்திக் கொள்கிறோம். ஏனெனில், நம்முடைய ‘இருதயத்தின் விசுவாசம்கூட’ நம்முடைய கண்கள் காண்பதற்கு ஒப்பாகவே இருக்கிறது. அதுஏனென்றால், ‘அந்த விசுவாசம்’ தேவனிடமிருந்து நமக்குள் தரப்பட்டதாயிருக்கிறது. இவ்வித அருமையான ஜெப வாழ்க்கையில் எவ்வளவு அதிகமாய் பழகி வருகிறோமோ, அவ்வளவு அதிகமாய் ‘தேவன் தரும் நிச்சயத்தை நன்கு உணர்ந்து’ விசுவாசத்துடன் அமைதியாய் இருக்க கற்றுக்கொள்ள முடியும்.

கர்த்தருக்குச் சொந்தமானவர்களே, “கர்த்தர் தந்த வாக்குதத்தத்தை, அவர் வந்து சந்திக்கும் வரை காத்திருங்கள். அவர் தன் வாக்குதத்தத்தை சந்திக்க வரும் பயணத்திலிருந்து திரும்பிப் போகவே மாட்டார்”, இதுவே நம் விசுவாசத்தின் உறுதி!

- *Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## தேவனுக்கு முன்பாக வாழ்ந்த புத்தியுள்ள கன்னிகைகள்!

*மனுஷருக்கு முன்பாக வாழும் ஜீவியம், பெரு நஷ்டம்*

ஆண்டவர் இயேசு “பரலோக ராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட **பத்து கன்னிகைகளுக்கு** ஒப்பாயிருக்கிறது! அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள், தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள். எண்ணெயையோ தங்களோடு கொண்டு போகவில்லை. புத்தியுள்ளவர்கள், தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள்”(மத்.25:1-4)

*என, தனது 2-வது வருகையின் முக்கிய நிகழ்ச்சியை இந்த உவமையில் குறிப்பிட்டார்.*

*புத்தியில்லாத ஐந்து கன்னிகைகள் இவ்வுலகத்தாரோ அல்லது கிறிஸ்தவ உலகின் மாறுபாடான சந்ததியரோ அல்ல! ஏனென்றால் அவர்களும் "***கன்னிகைகள்***" என்றே ஆண்டவர் குறிப்பிட்டார்! எனவேதான் இவர்களும் புத்தியுள்ள கன்னிகைகளோடு சபையில் சேர்ந்திருந்ததைக் காண முடிந்தது. இந்தப் பத்துபேருமே, இவ்வுலகத்திற்குத் தங்கள் இருதயத்தை அடைத்து வைத்த கன்னிகைகள்தான்! இப்பத்துப் பேருமே மணவாளனைச் சந்திக்கும்படி பயணித்தவர்கள்தான்! இவர்கள் யாவருமே இவ்வுலத்திற்குப் புறமுதுகுகாட்டி, உன்னதங்களில் வீற்றிருக்கும் இயேசுவுக்குரிய மேலானவைகளையேத் தேடினார்கள் (கொலோ.3:1,2). இவர்கள் யாவருமே தீவட்டியாகியத் தங்கள் சாட்சியோடுதான் சென்றார்கள்!*

"

**ஆனால், ஒரே ஒரு பெருத்த வித்தியாசம்....! புத்தியுள்ள கன்னிகைகள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் கொண்டு சென்றார்கள். புத்தியில்லாத கன்னிகைகளோ தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற அத்தியாவசியத்தை சிறிதுகூட உணராமல் சென்றார்கள்!**

*ஜீவியத்தின் பல்வேறு சோதனைகளில், நாம் மற்றவர்களோடு இருக்கும்போதுதான், அடிக்கடி நம்முடைய மாம்சம் வெளியரங்கமாகிறது. இங்குதான் நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்க வேண்டிய சந்தர்ப்பம்! இப்படிப்பட்ட சோதனை நேரங்களில், புத்தியில்லாத கன்னிகைகள் கூட தங்கள் சுயத்தை வெறுப்பார்கள். ஏன்? ஏனென்றால்* **மற்றவர்கள் தங்களை நியாயம் தீர்க்காதபடி** *தங்கள் தீவட்டிகள் எரிய வேண்டுமே! அதற்குத்தான். அதில், இப்போது இவர்கள் திருப்தியும் அடைந்துவிடுகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் பெற்ற சில துளி எண்ணெய், (மனுஷருக்கு முன்பாக) அது உருவான அக்கணமே எரிந்துபோனதே என, சிறிதும் சிந்திக்கமாட்டார்கள்.* **ஜனங்களுக்கு முன்பு இவர்கள் தீவட்டி எரிந்தது** *என்னவோ உண்மைதான். ஆனால் அதற்குப் பிறகு அத்தீவட்டி எப்போதும்போல காலியாகத்தானே இருக்கிறது!*

*ஆம்! இங்குதான் புத்தியுள்ள கன்னிகைகள் தங்கள் பாத்திரங்களில் எண்ணெய் சேகரிக்கத் தீவிரித்தார்ககள். இவர்களுடைய தீவட்டியும் ஜனங்களுக்கு முன்பாக எரியத்தான் செய்தது. ஆனால் அது அவர்களை திருப்தி செய்துவிடவில்லை. அவர்கள் செய்தது*

*என்ன? சோதனை நேரம் முடிந்தவுடன், தாங்கள் பேசிய மற்றும் செய்த காரியங்களை எடுத்துச் சென்று* ***தேவனுடைய பார்வையில்*** *தங்களை மௌனமாய் வைத்தார்கள். தங்களையும், தங்கள் சுய வாழ்க்கையையும் கண்டார்கள், பின்பு அதை நசுக்கினார்கள்! இத்தருணத்தில் இவர்களுடைய வெளிச்சத்தைக் காணும்படி ஒரு மானிடரும் அங்கு காணப்படவில்லை! அவர்களின் தீவட்டிக்கு அங்கு வேலையும் இல்லை. இந்த இரகசிய பாசறையில் பெற்ற எண்ணெயை தங்கள் பாத்திரங்களில் அப்படியே சேர்த்து வைத்தார்கள்! ஆ, இதுதான் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருந்த அவர்களின் வாழ்க்கை!*

புத்தியில்லாத கன்னிகைகள், வெளியரங்கமான தங்கள் பாவங்களை விட்டுவிட்டதில் திருப்தி கொண்டார்கள்! இதை பவுல் குறிப்பிடும்போது "என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதிலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே" எனக் கூறி நின்றார்! (1கொரி.4:4).

"நாம் ஆவியினாலே **பிழைத்திருந்தால்,** ஆவிக்கேற்றப்படி **நடக்கவும் கடவோம்**" என கலாத்தியர் 5:25-ல் வாசிக்கிறோம். நீங்கள் பொறுமையிழந்துவிட்டு, ஆவியில் பிழைத்திருப்பது கூடாத காரியம். பொறுமை இழப்பது, உங்களை அறியாமல் நடந்துவிடும் செயல் அல்ல! அதன் விளைவாய், குற்றமுள்ள மனசாட்சி உங்களைத் தழுவிப்பிடிக்கும். உங்கள் தீவட்டி எரியாது! உங்களிடம் ஏதோ கோளாறு நடந்துவிட்டது என மற்றவர்களும் காண முடியும்! இவ்வாறு சம்பவித்து விடாதபடி, மற்றவர்கள் ஒன்றும் நியாயம் தீர்க்கமுடியாமல், ஆவியில் பிழைத்து ஜீவிக்கிறார்கள் என்பதற்காக, கலாத்தியரிடம் பவுல் திருப்தி கொள்ளாமல், "**....நாம் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்**" என அழைத்தார்! உங்கள் பாதங்கள் கடந்து செல்லும் இந்த நடைதான், உங்களை ஆழமான ஜீவியத்திற்குள் கொண்டு செல்ல முடியும்! இதுவே, ஆவியில் விழிப்புள்ள ஜீவியம்!

> " **மற்றவர்கள் உங்களை நியாயம் தீர்க்க வகையில்லாமல் இருக்கலாம்! அல்லது நீங்களே உங்களைக் குறித்து மாறுபாடாக ஏதும் காணாமல் இருக்கலாம்! இருப்பினும் தேவன் உங்களை நியாயம் தீர்க்க முடியும் என்பதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். இவ்வாறு தொடர்ந்து நீங்கள் ஆவியில் நடந்து..... தேவன் உங்கள் அந்தரங்கத்தை நியாயம் தீர்த்து..... ஆ, இப்போதுதான் உங்கள் பாத்திரங்களில் எண்ணெய் சேர ஆரம்பிக்கிறது!!**

*புத்தியில்லா கன்னிகைகளின் நோக்கம் என்ன என்பது இப்போது தெளிவாகிறது. ஜனங்கள் தங்களை நியாயம் தீர்க்க முடியாது..... அதுபோதும் இவர்களுக்கு! தேவனுடைய சமூகத்திற்கு சென்று தங்களை மௌனமாய் வைத்து அமர்ந்திட கொஞ்சம்கூட உணர்வில்லாதவர்கள். அவ்வாறு அமர்ந்திருப்பதை, இவர்கள் சோம்பேறித்தனமாகவும்; அவசியமற்ற செயலாகவும் எண்ணிக்கொள்கிறார்கள். சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமா? தங்கள் சாட்சியின் தீவட்டியோடு இங்கும் அங்கும் ஊழிய பிரயாணம் செய்ய வேண்டுமா? அதில் இவர்கள் வைராக்கியமானவர்கள்தான்! இவர்கள் சரியாக மார்த்தாளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவள் சேவை செய்தாள்! ஆனால் அந்தோ, அவையனைத்தும் வெறும் மனுஷீகமான வைராக்கியம்தான்! அதன் விளைவாய், இந்த மார்த்தாள் மரியாளைப்போல் இல்லாமல், அனேக காரியங்களைக் குறித்து, கலங்கிப்போயிருந்தாள்! இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, தன் பாத்திரத்தில் எண்ணெய் சேகரித்துக் கொண்டிருந்த மரியாளையோ, அவளால் புரிந்துகொள்ளவில்லை!*

ஒருவன் நல்ல பேர் வாங்குவதற்கு, ஏதேனும் ஒன்றைச் செய்தாக வேண்டும். சர்தை சபை தூதனுக்கு "உயிருள்ளவன்" என்ற பெயர் இருந்தது. அவன் மிகவும் சுறுசுறுப்பானவன்! நல்ல பல கிரியைகளை நடப்பித்தான்! ஆனால் அவனோ செத்தவன்! இவன் இயேசுவோடு உறவாடும் ஐக்கியத்தை இழந்து போனான். தன் அனைத்துப் படோடாபக் கிரியைகளையும் **மனுஷர் பார்வைக்காகவே செய்தான்.** ஆ, இது கொடுமை..... இன்றும் எத்தனைபேர் கிறிஸ்துவுக்காக எடுக்கும் வைராக்கியத்தால், இனிய இயேசுவோடு கொள்ளும் ஐக்கிய உறவாடலை இழந்து போனார்கள்! இவர்கள் "தங்களுக்குரியவைகளையே தேடினார்கள்" (பிலி.*2:21*). இவர்களுக்கு மிச்சமாய் இருந்ததெல்லாம், வெறும் தீவட்டி வாழ்க்கைத்தான்!

இவர்கள் எவ்விதம் கடிந்து கொள்ளப்பட்டார்கள். பார்த்தீர்களா? "நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் **தேவனுக்கு முன்** நிறைவுள்ளவைகளாக நான்காணவில்லை" (வெளி.*3:2*) என்ற தேவனுடைய ஆதங்கமேயாகும்!

" **முழு இருதயமாய் அவருக்கு அனல் கொண்ட உண்மையில்லாமல் அவருடைய பார்வையில் தன்னைத் தனித்து வைத்து நடக்க உண்மையற்ற அனைவருக்கும் இதே கதிதான் ஏற்படும்!**

பத்து கன்னிகைகளுமே, பரிசுத்த ஜீவியத்தில் அக்கறை

உள்ளவர்கள்தானே, என நாம் நம்ப முடியலாம். ஆனால் முதற்பலனை அடைவதற்கு இதுமாத்திரம் போதாதே! நம் கிரியைகள், கலியாண வஸ்திரம் அடைவதற்குத் தகுதியாக, பூரணமுள்ள பழுதற்றதாயிருக்க வேண்டும்! நம் கிரியைகள் "நற்கிரியைகள்" என்பதோடு மாத்திரமல்லாமல் **அவை தேவனைப் பற்றிய பக்தி வைராக்கியத்தோடு செயல்படுத்தப்பட வேண்டும்!** *(தீத்து 2:14).*

> **"ஜனங்கள் நம் தீவட்டியை மாத்திரமே காண முடியும்! ஆனால், பாத்திரம் மறைந்திருப்பதால், அதை அவர்கள் காணவே முடியாது! ஆம், பத்து கன்னிகைகளுக்குள் காணப்பட்ட பெருத்த வித்தியாசத்தை ஜனங்கள் கண்டுகொள்வது அரிதிலும் மா அரிது!**

இன்னமும் கவனியுங்கள்! "மணவாளன் தாமதித்தபோது, அவர்கள் எல்லோரும் தூங்கிவிட்டார்கள்" (மத்.25:25). எல்லோருமே தூங்கிவிட்டார்கள்! இருப்பினும், அதற்காக அவர்கள் கடிந்துகொள்ளப்படவில்லையே?! எனவே இந்த தூக்கம், அவர்கள் பின்வாங்கி வழிவிலகிப் போனார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவில்லை என்பது உறுதி! பின் வேறு எதை உணர்த்துகிறது? "ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது" (யோவான் 9:4) என்பதையே உணர்த்துகிறது. ஆம், அவர்கள் தங்கள் தீவட்டிகளை உபயோகப்படுத்த முடியாத (பொதுவான வெளிக்கூட்டங்கள் போன்றவை) நேரம் வந்துவிட்டது. **அவர்கள் சும்மாயிருக்க வேண்டிய கட்டாயத்திற்கு** ஆளானார்கள்!

அந்த நடு ராத்திரியிலோ, "இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று" (மத்.25:6).

*அப்போது, எல்லா கன்னிகைகளும் எழுந்தார்கள். அந்தோ! புத்தியில்லாத கன்னிகைகள் தங்கள் தீவட்டிகள் அணைந்து கொண்டிருப்பதை அப்போதுதான் கண்டுபிடித்தார்கள்! அச்சமயம் சூழ்ந்துகொண்ட ஆவிக்குரிய பொல்லாத இருளைக் கிழித்துச் செல்வதற்குரிய பெலனைத் தங்கள் வாழ்க்கையில் இழந்து, வெகுவாய் தாழ்ச்சியடைந்திருந்தார்கள்! தாங்கள் அசட்டையாய் உதாசினம் செய்த காரியம் இன்னதென்பது இவர்களுக்கு இப்போதுதான் புலனானது! ஆம், பாத்திரங்களில் எண்ணெய் இல்லை!*

புத்தியுள்ள கன்னிகைகளிடம் எண்ணெய் வாங்க முயற்சித்தார்கள். ஆனால் புத்தியுள்ள கன்னிகைகளோ, தங்களுக்குத்

*தேவையான அளவுதான் வைத்திருந்தார்கள். எனவே அவர்களுக்குத் தரமுடியவில்லை. பின் எவ்வாறு எண்ணெய் பெற முடியும்? விற்கிறவர்களிடத்தில் செல்ல வேண்டும்! அதாவது, மீண்டும் உலகில் சென்று ஜீவித்து, "சுயத்தை இழந்து, எண்ணெய் சுதந்தரிக்கும்" வாழ்வின் சூழ்நிலைகள்! ஒலிவ வித்துக்கள்! ஆம், அதுதான்.... அவர்களின் சுய வாழ்க்கை நசுக்கப்படும் சந்தர்ப்பங்கள்! அப்போது மாத்திரமே தேவையான எண்ணெயைப் பாத்திரத்தில் பெற முடியும்!*

*மனுஷருக்கு ஒளியாய் இருப்பது அவர்களின் ஜீவியமே! எனவே அந்த ஒளியைக் கடன்வாங்குவது கூடாதகாரியம். ஆனாலும், இப்படிப்பட்ட ஜனங்களைத்தானே இன்றும் நாம் காண்கிறோம். எவ்வளவு பாவ ஜீவியத்தில் இருந்தாலும், புத்தியுள்ள கன்னிகைகள் போன்ற உத்தம ஜனங்களோடு சபை கூட்டத்திற்குச் செல்வதால், 'மாயமான தைரியத்தைப்' பெற்றிருக்கிறார்கள். ஆனால் பரிதாபம்! அவர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்தும் நாள் அதிசீக்கிரம் வரப்போகின்றதே!*

*மணவாளன் வருகையின் சத்தம் தொனித்தபோது, எண்ணெய் வாங்குவதற்குரிய காலம் தாமதமாகிக் கடந்துபோய்விட்டது. மணவாளன் வந்துவிட்டார்! ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடுகூட கலியாண வீட்டிற்குள் பிரவேசித்துவிட்டார்கள்! பின்பு, மற்ற கன்னிகைகளும் வந்து, "ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும்" என்றார்கள். அதற்கு அவர், "உங்களை மெய்யாகவே நான் அறியேன்" என்று சொல்லிவிட்டார் (மத்.25:11,12).*

"

**அந்தோ, இவர்கள் மனுஷர் பார்வையில் ஜீவித்தார்கள்! மணவாளனின் நற்சாட்சியைக் குறித்து சிறிதும் அக்கறையற்றிருந்தார்கள். மரியாளோடு உறவாடிய முகமுகமான இயேசுவின் உறவை இவர்கள் பெறவில்லை! ஆண்டவரும் அவர்களை அறியவில்லை!**

*புத்தியில்லா கன்னிகைகளின் காலம் முடிந்துவிட்டது! நள்ளிரவு வந்தது! இருளும் அதிக மந்தாரம் கொண்டது! நம் பாத்திரங்களில் எண்ணெய் சேகரிக்க, இப்போதாவது உணர்வு பெற்று விழித்துக்கொள்வோமாக!*

*அப்போது, ஆம், அப்போது மாத்திரமே "இனி சம்பவிக்கப்போகிற இவை எல்லாவற்றிற்கும் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாய் நிற்பதற்குப் பாத்திரவான்களாய்" மாற முடியும் (லூக்கா 21:36). அல்லேலூயா!*

*- ஸிகார்ட் பிராட்லி*

## ‘மரண இருளின் பாதையை’ திரைவிலக்கி காண்பித்தார்!

*விவரிக்க இயலாத, கர்த்தர் தந்த அனுபவம்*

**சு**மார் 6-மாதகாலமாய் நான் கடந்து வந்த சுகவீனத்தில், கர்த்தர் எனக்கு காண்பித்த அபூர்வமான அவரது பாதையை கற்றுக் கொண்டேன்!

**“ எப்படியெனில், மரணப்பள்ளத்தாக்காகிய வனாந்தரத்தில், கர்த்தர் என்னை எவ்வாறு நடத்துவார்? என்ற இரகசிய பாதையை காண்பித்தார்!**

அதில் கடந்து செல்லும்போது, என்னை அவரது அன்பினால் போஷித்து, பயண ஆரம்பத்திலேயே என்னைத் தேற்றுவார்! என, எனக்கு உறுதி கொடுத்தார். பிறகு அவருடைய மென்மையும் வலிமையான செட்டைகள் என்னை மண்ணுலகிலிருந்து எவ்வாறு பரத்திற்கு தூக்கிச்செல்லும்! எனவும் காண்பித்தார். அதை அறிந்து, என் உள்ளம் பரவசமடைந்தது!

**“ நான் இப்போதே இந்த முழு உலகத்திலிருந்தும், அதன் சிறையிருப்பி லிருந்தும் விடுதலையாகி வந்ததைப் போலவே உணர்ந்தேன்!**

தேவன் எனக்கு அருளிய ‘சொல்லி முடியாத இரக்கங்களை’ நான் எவ்வாறு பாடிப் புகழ்வேன் என்றே எனக்குத் தெரியவில்லை! அவரது மாறாத பரிசுத்தத்திற்கும், இரக்கத்திற்கும் முடிவேயில்லை என்பதே என்னுடைய அறிக்கையாயிருக்கிறது!:

*நான் அதிக சுகவீனமாய் ‘மரண தறுவாயிலிருப்பதை’ என்னைச் சூழ இருந்த அனைவரும் கண்டார்கள். என் பெலவீனம் அகோரமான வலியை எனக்குத் தந்தது. தந்தை லா-கோம்பே அவர்கள், விரைவாய் சென்று எனக்கு* ***கர்த்தருடைய பந்தியைத் தர ஆயத்தமானார்!*** *மடத்து தலைவிகள் அனைவரும், எனக்கு மரணம் ஏற்படுவதற்கு முன்பாக சீக்கிரமாய் ‘அப்பத்தையும் ரசத்தையும்’ தரும்படி வலியுறுத்தி கூறினார்கள். நான் இந்த உலகைவிட்டுப் பிரிந்து செல்லப்போகிறேன் என்பதை சுற்றிலுமிருந்த யாவரும் விளங்கிக்கொண்டார்கள். அதிக வலியுடன் படுக்கையிலிருந்த நான், என்னைச் சூழ இருந்தவர்கள் ‘என்னை வழியனுப்ப’ ஆயத்தமாகிவிட்டார்கள் என்பதை என்னால் உணர முடிந்தது! நானும் மிகுந்த நிறைவான மனதிருப்தியில் மரித்து, கர்த்தரோடு செல்லத் தயார் நிலையிலிருந்தேன். நானோ, தேவனோடு கொண்ட ஐக்கியத்தில் மிகுந்த பரிசுத்தத்தோடும், இனிமையான ஆவிக்குரிய ஐக்கியத்திலும் இணைந்திருந்தபடியால், “மரணம் என்னை*

*அவரிடமிருந்து பிரித்திட இயலாது!" என்பதை உறுதியாய் அறிந்திருந்தேன். இன்னும் அதிகமாய், மரண வாசல் நெருங்கி இருக்கிறது என்ற உணர்வு, நான் கர்த்தரோடு கொண்டிருந்த 'சினேக உறவை' வலிமைப்படுத்தியதையே உணர்ந்தேன்! நெடு முழங்காலில், என் படுக்கையருகில் ஜெபித்துக்கொண்டிருந்த தந்தை லா - கோம்பே அவர்கள், "என் கண்கள் படபடத்து மூடி, உயிர் நாடி என்னை விட்டு பிரியப் போவதை" அவருக்கு காண்பித்தது. அச்சமயம், தேவ ஆவியினால் நிறைந்த தந்தை லா-கோம்பே, அங்கு திரளாய் கூடியிருந்த பரிசுத்தவான்களின் நடுவில், உரத்த சத்தமாய் "மரணமே எங்கள் சகோதரியின் மீது வைத்திருக்கும் உன் கரத்தை விட்டுவிடு" என எல்லோருக்கும் அதிர்ச்சி தரும் வகையில் கட்டளையிட்டார்! ஆ ஆச்சரியம், உடனடியாகவே எல்லாம் ஸ்தம்பித்து, நின்றுவிட்டது!*

இவ்வாறாகவே, என்னை அதிசயமாய் இந்த பூமியில் தொடர்ந்து உயிர்வாழ வைத்திட தேவன் பிரியமாயிருந்தார்!

*- மேடம் குயான்*

---

## நம்மோடு வாசம் செய்திடவே இயேசு உயிர்த்தெழுந்தார்!

*கிறிஸ்துவோடு வாழாதவன், கிறிஸ்தவனல்ல*

அவர் உயிர்த்தெழுந்து அடைந்த மேன்மையும் மகிமையும் தமக்காகவல்ல, நமக்காகவே! அந்த சம்பாத்தியம் முழுவதையும் நமக்கே தந்து விட்டார்! என்ற உண்மையை அறிந்தால் மாத்திரமே, **அவருடைய உயிர்த்தெழுதலின் பாக்கியம்** இன்னதென்று, பூரணமாய் அறிந்திட முடியும்! இனி காலம் செல்லாது! அவரோடுகூட இந்தப் பேரின்ப மகிமையில் பிரவேசிக்கச் சிலாக்கியம் பெற்றவர்கள் அனைவரும் பாக்கியவான்கள்! மற்ற, பெயர் கிறிஸ்தவர்களான அவிசுவாசிகள் அனைவரும் புறம்பே தள்ளப்படுவார்கள். அவர்கள் இப்போதே ஆவிக்குரிய மாறுதலடைந்து, கிறிஸ்துவில் நிலைத்திருந்து ஜீவிக்காவிட்டால், ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு அவர்களுக்குத் தகுதி இராது! பாவத்தைப் பிரதான வாழ்க்கையாக்கி, நித்திய ஜீவனைப் பற்றி அசட்டையாயிருப்பவர்கள் புலம்பித் தவிக்கும் நாள் வருகிறது! கிறிஸ்து உயிர்த்தெழுந்தது பொய்யாயிருக்குமானால், அவர்கள் மனங்கொண்டபடி நடக்கலாம். அவர் இப்போது பிழைத்திருப்பதும், சீக்கிரமாக வெளிப்படப்போகிறதும் மெய்யானால், அவர்கள் முடிவு என்னமாயிருக்கும்?

“ கிறிஸ்தவர்களில், அநேகருடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, ஆண்டவர் உயிரோடிருப்பதை அவர்கள் நம்பாததுபோலவே வாழ்கிறார்கள். அவரை, அவர்கள் தரிசித்தவர்களானால், ஒருக்காலும் இவ்வாறு பாவ வழியில் நடக்கமாட்டார்கள்!

உயிர்த்தெழுந்த இரட்சகரைக் காணவேண்டிய இடம் எது? அவர் மூன்று இடங்களில் இருக்கிறார். நாம் முக்கியமாக அவரைப் பிதாவின் வலதுபாரிசத்தில் மகிமையடைந்து வீற்றிருக்கும் இரட்சகராக காண்கிறோம். நாமறியாமலே நமது இருதயத்தைப் பரத்துக்கு உயர்த்துகிறோம். அது சரியே! நமதாண்டவர் பரமேறினபின், தமது சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் பிதாவின் சிங்காசனத்திலிருந்து அரசாளுகிறார் என்பது மெய்! ஆகையால் அவர் பரத்திலிருப்பதாக நாம் நினைப்பது தப்பல்ல. இன்னும் எங்கே இருக்கிறார்? **நமது பக்கத்தில் இருக்கிறார்,** “உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்” என்று வாக்குப்பண்ணினவர் அவரே! அவர் உயிர்த்தெழுந்த பின்பு, தமது சீஷர்களோடு கூடவே இருந்தார். அவர்களோ அவரைக் காணவில்லை! அவர் தம்மைப் பலவிதமாய் வெளிப்படுத்தினபோதுமாத்திரமே அவர்கள் அவரைக் கண்டார்கள். அவரைக் காணாதபோது, அவர் அவர்களைவிட்டு எங்கேயோ போய்விட்டதாக நினைத்திருக்கலாம். ஆனால் அவர் அவர்களோடுகூடத்தான் இருந்தார்.

“ அவர் வெளியிலிருந்து அறைக்குள் வந்தாரென்றும், யூதேயாவுக்கு வந்தாரென்றும் சொல்லியிருந்த போதிலும், அவர் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்கும் போனதாக நாம் நினைக்கக்கூடாது. அவர் அவர்களோடேயே இருந்தார்!

அவர்கள் கலிலேயாவுக்குப் போவது பிரயாணமாகும். ஆண்டவர் தம்மை அவர்களுக்கு எங்கே வெளிப்படுத்த விரும்பினாரோ அங்கே வெளிப்படுத்துவது அவருக்கு இனி பிரயாசமுமல்ல, பிரயாணமுமல்ல! அவர் மரிக்குமுன், அவரைக் குறித்து: “ஆண்டவரே, நீர் இங்கே, இருந்தீரேயானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான்” என்று மார்த்தாள் மரியாள் சொல்லிப் புலம்ப வேண்டியதாயிற்று. அவர் ஓரிடத்தில் இருந்தால், அவருக்கு ஆள் அனுப்பி அவர் வரும்வரை காத்திருக்க வேண்டும்! அவர் உயிர்த்தெழுந்த பின்போ, அந்தக் கட்டிலிருந்து அவர் விலகினார்! ஓரிடத்தில் மாத்திரமல்ல, எங்கும் எல்லாரோடும் இருக்கக் கூடியவரானார். அவரைக் காண ஆவிக்குரிய பார்வைதான் நமக்கு வேண்டும்! இந்த இரகசியத்தின் உண்மையை

அவர் சீஷர்களுக்கு தரிசனங்கொடுத்த மாதிரியில் காணலாம். அந்த நேரத்திலும் அவர் அவர்களோடுதானிருந்தார்!

"

**நாம் அவரை உணர்ந்து நினைக்கிறதில்லை. ஆகவேதான், அவர் கூடயிருந்தும் அவர் சமூகம் நமக்குப் பிரயோஜனப்படுகிறதில்லை! அவரைப் பார்க்கத் தவறுவதினால் அநேக பாவங்களுக்கு ஆளாகிறோம்.**

'பக்கத்தில் நிற்கும் ஆண்டவரை' நாம் காணத்தக்க ஆவிக்குரிய பார்வையை தேவன் நமக்குத் தருவாராக! இன்னும் எங்கே அவரை காணலாம்? நமக்குள்ளேயே நாம் அவரைக் காணவேண்டும்! அவர் உயிர்த்தெழுந்ததின் பிரதான நோக்கமும், பிரதான ஆசீர்வாதமும் அதுவே! முந்தின இரண்டு இடங்களைப் பற்றி அநேகர் அறிந்திருந்தாலும், இந்த மூன்றாம் இடத்தை அவர்கள் யோசிக்கிறதில்லை. மூன்று இடங்களிலும் இதுவே பிரதானம்.... அவரை **பரத்திலிருக்கிறவராக** மாத்திரமல்ல, **பக்கத்திலிருக்கிறவராக** மாத்திரமல்ல, **நமது உள்ளத்தில் வசிப்பவராகக்** காண்பதே நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு வழங்கப்பட்ட ஒப்பற்ற இரகசியம்!

- பரமானந்தம் ஐயர்

---

## அவரது மகிமை வாசம் செய்யும், கர்த்தருடைய சபை!

*மகிழ்ச்சியுடன் சபை கூடிவருவோமாக*

**ப**ரிசுத்த ஆவியின் வரங்களைக் குறித்து 1கொரிந்தியர் 12-ம் அதிகாரம் விவரித்துக் கூறுகிறது. அது, கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள வெவ்வேறு வரங்களைக் குறித்து போதிக்கிறது! ஆனால், 14-ம் அதிகாரமோ நாம் சபையாய் கூடிவரும்போது கிரியை செய்திடும் வரங்களைக் குறித்து போதிக்கிறது. அவரது சரீரத்திலுள்ள வரங்கள், நாம் கூடிவரும் சபை கூட்டங்களில் கிரியை நடப்பிக்கிறது. நம் சரீரம், மிகுந்த இசைவோடு சேர்ந்து செயல்படுவதைப் பாருங்கள்! கண்கள், பாதங்களுக்கு உதவி செய்கிறது! காதுகள் கரங்களுக்கு உதவி செய்கிறது! கரங்கள், நம் வாய்க்கு உதவி செய்கிறது! இவ்வாறு, சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவாய் சேர்ந்து செயல்படுகின்றன! அதுபோலவே, கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள வரங்கள், நாம் கூடிவரும் சபைக் கூட்டத்தில் நாம் காணும்படி வெளிப்படுகின்றன.

"

**சபைக் கூட்டத்திற்கு அவ்வப்போது வராமலிருப்பவர்களோ, அல்லது ஏனோ தானோ என்று பொறுப்பில்லாமல் வருபவர்களோ 'அவருடைய சரீரம் செயல்படுவதை' காணமுடிவதில்லை!**

*அவரது சரீரத்திலுள்ள அவயவங்களில், ஒருவருக்கொருவர் வரங்களின் கிரியைகள் பரிமாற்றம் ஏற்படும்பொழுது, கூட்டங்களில் நாம் ஏறெடுக்கும் ஜெபங்கள் தேவனால் கேட்கப்படும் என்பது மாத்திரமல்லாமல், நாமும் ஒருவருக்கொருவர் அதிகம் வெளிச்சம் பெற்று பக்திவிருத்தி அடைய முடியும்! சபையில் அருளப்பட்ட எல்லா ஊழியங்களும், நாம் கூடிவரும் கூடுகையில் வெளிப்படுகிறது.* **சபையில் கூடிவரும் பரிசுத்தவான்களுக்கென்றே 'ஊழியங்களை' தேவன் அருளிச் செய்திருக்கிறார்!**

*மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தில் 'தேவனுடைய பூரணமான ஒளி' அவர் வாசம் செய்திடும் மகா பரிசுத்த ஸ்தலத்திலேயே இருக்கிறது. கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தில், சூரிய ஒளி மாத்திரமே உண்டு! பரிசுத்த ஸ்தலத்திலோ, சூரிய ஒளி செல்லாதபடியால் எப்போதும் இருளாகவே இருக்கும்! ஆகவே, ஒலிவ எண்ணெய் கொண்டு ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கும். ஆனால், மகா பரிசுத்த ஸ்தலத்தில் இயற்கை ஒளியும் அல்ல! மனுஷர் ஏற்றிடும் ஒளியும் அல்ல!* **தேவனுடைய ஒளி மாத்திரமே** *பிரகாசித்துக் கொண்டிருக்கும். இவ்வாறாக, தேவனுடைய ஒளி பரிசுத்த ஸ்தலத்தில் வாசமாயிராமல்,* **மகா பரிசுத்த ஸ்தலத்தில் மாத்திரமே** *வாசமாயிருக்கும்! ஒருவன் 'அந்த ஒளியை' காண வேண்டுமென்றால், அவன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் வரவேண்டும்! தனிமையில் நிற்கும் ஒருவன் ஏதாவது ஒரு வகையில் வெளிச்சம் பெற முடியும். ஆனால் அந்த வெளிச்சம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் செய்யும் தேவ வெளிச்சத்திற்கு ஒப்பாயிருப்பதில்லை.*

> "எனவேதான், பரிசுத்தவான்கள் சபையாய் கூடிவரும்போது, அது தேவன் வாசம் செய்யும் ஸ்தலமாய் மாறுகிறபடியால், தேவனுடைய வெளிச்சம் பூரண பிரகாசத்தோடு அங்கு பிரகாசித்துக்கொண்டிருக்கும்! ஆம், நாம் சபைகூடிவரும் நேரமெல்லாம், தேவன் தம்முடைய ஒளியை வலிமையாய் பிரகாசிக்கச் செய்கிறார்!

*அது எப்படியென்று, நம்மால் விளக்கிச் சொல்ல முடியா விட்டாலும் 'கிறிஸ்துவின் அவயவங்கள்' அவரது சரீரத்தில் ஒருவருக் கொருவர் கிரியை செய்கிறபடியால், தேவன் தன்னுடைய ஒளியை பிரகாசிப்பிக்கச் செய்ய முடிகிறது!*

*புதிதாக சபைக்கு வரும் விசுவாசிகள், கிறிஸ்துவின் சரீரத்தில் வெளிப்படும் வெளிச்சத்தைக் காண முடிவதில்லை! இவர்கள் சபை கூட்டங்களில் மிகுந்த அக்கறையோடு கவனம் செலுத்தாதபடியால், மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஒளியை காண முடிவதில்லை! மெய்யாகவே,*

*அவருடைய சரீரத்தில், ஆவிக்குரிய கிரியைகள் அதிகமாய் நடைபெறுகிறது. நாம் அடிக்கடி கூடிவரும்போது, கர்த்தருடைய கிரியைகள் நடைபெறுவதை முன்னிட்டு, கிறிஸ்துவின் ஆழத்தை ஏராளமாய் கற்று பெற்றுக் கொள்கிறோம்.* **இவ்வளவு பாக்கியங்கள், கர்த்தருடைய சபையில் வாசமாயிருக்கிறபடியால்** *நாம் குடும்பமாய் மிகுந்த மகிழ்ச்சியோடு கர்த்தருடைய சபைக்கு புறப்பட்டுச் செல்வோமாக!*

*- வாட்ச்மென் நீ*

---

## சபை வேத வாக்கியங்களுக்கு 'அடிபணிதல்' அவசியம்!

*இது, வேத வாக்கியத்தை புறக்கணிக்கும் காலம்*

**ப**ரிசேயர் சதுசேயருக்கும், இயேசுவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் அடிக்கடி எழுந்ததுண்டு. வேத பண்டிதத்தை முன்வைத்து பல்வேறு கேள்விகளை அவர்கள் எழுப்பினர்! ஏழு சகோதரர்களை, ஒருவர்பின் ஒருவர் இறந்தபோது, மணந்த பெண் "உயிர்த்தெழுதலில்" யாருக்கு மனைவி? என்று சதுசேயர் இயேசுவிடம் கேட்டனர் (மத்.22:23-32).

> "**இயேசு வலியுறுத்திக்கூறிய உயிர்த்தெழுதலை அவர்கள நம்பாதபடியினால்தான், இக்கேள்வியைக் கேட்டனர் (வச.23; அப்.23:8). அவர்களுக்குப் பதில் கொடுக்க, இயேசு தாமதியாமல், உடனே அவர்கள் கவனத்தை வேத வசனத்திற்கும், அதன் வல்லமைக்கும் நேராய் திருப்பினார் (மத்.22:29).**

வேத பண்டித விவாதங்களைத் தொடர்ந்து, எத்தனையோ தேவ மனிதரும் திருச்சபைகளும் ஒருவருக்கொருவர் எதிரிகளாகி விட்டதை நாம் அறிந்திருக்கிறோம். வேத வசனத்திற்கு திரும்பி வந்தால் மட்டுமே, சமாதானம் திரும்ப வாய்ப்புண்டு! கருத்து வேறுபாடுகளும், வியாக்கியான வித்தியாசங்களும் நம்மை எதிரிகளாக்க அவசியமில்லையே! "**தேவனுடைய வார்த்தை**" **அத்துடன்** "**தேவ வல்லமை**" (Word of God & Power of God) ஆகிய இரண்டையும் சம நிலையில் பார்க்காமல், ஒன்றைவிட அடுத்ததை அளவுக்குமீறி வலியுறுத்துவது, நல்ல விசுவாசிகள் நடுவிலேயே கசப்பை உண்டாக்குகிறது. பெந்தெகொஸ்தேயினர் மற்றும் பெந்தெகொஸ்தேயினரல்லாதவர் 'இக்குறிப்பை' மனதிற்கொள்வது மிகவும் நல்லது!

வேத வாக்கியத்தை கோடிட்டு, "உயிர்த்தெழுந்த பரம வாழ்வில், கொள்வதும் கொடுப்பதுமாகிய உறவு இல்லை" எனக்கூறி,

சதுசேயரை இயேசு வாயடைத்துவிட்டார் என்றறிந்த பரிசேயர், அவரைச் சோதிக்க வேறொரு கேள்வியைக் கேட்டனர்: "போதகரே, நியாயப்பிரமாணத்தில் பிரதானமான கட்டளை எது?" (மத்.22:34-36). இங்கும் இக்கேள்விக்குப் பதில் தர, "நியாயப்பிரமாணம் முழுவதிலும் தீர்க்கதிரிசனங்களிலும்" எழுதியிருப்பதற்கு நேராய் இயேசு அவர்களைத் திருப்பி, குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்!(வச.40).

வேத வசனத்தின் 'ஒருபுறமாய் சாய்ந்துவிடாமல்' நேர் முகமாய் வேத வசனத்திற்குத் திரும்பும்போதுதான், உபதேசத்துக்கடுத்த விவாதங்களை முடிவுக்கு கொண்டுவர முடியும்! பல்லாண்டுகளுக்கு முன்பே இதை அறிந்துவைத்திருந்த தாவீதரசன், சங்கீதம் 119 :165-ம் வசனத்தில் "உமது வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு; அவர்களுக்கு இடறல் (தடுமாற்றம்) இல்லை" என கூறினார்.

> "**ஆதி அப்போஸ்தலர் அவ்வாறாகவே வேத வாக்கியத்தை அடிபிறழாமல் நடைமுறைப்படுத்தி வாழ்ந்து ஊழியம் செய்தனர்!**

'விருத்தசேதனம்' வேண்டுமென்ற யூதேயா மனிதருக்கும்... பவுல், பர்னபா ஆகியோருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமும் தர்க்கமும் எழும்பியதை நாம் அறிவோம் (அப்.15:1,2). "எழுதப்பட்ட வேதவாக்கியத்திற்கு" அவர்கள் யாவரும் அடிபணிந்ததால், அந்தப் பிரச்சனைக்கு எளிதாய் தீர்வு காணப்பட்டது (வச.15,21). பரிசுத்த ஆவியானவரது ஒன்பது வரங்கள் பட்டியலில், முதலில் வரும் "ஞானத்தைப் போதிக்கும் வசனம்" மற்றும் "அறிவை உணர்த்தும் வசனம்" ஆகிய இரண்டு வரங்களும் அச்சமயத்தில் நேர்த்தியாய் வெளிப்பட்டன (1கொரி.12:8). **நம் சபைகளில் "வேத வாக்கியங்களுக்கு அடிபணிதல்"** என்ற இதே தத்துவத்தின்படி, இதே மாறாத அடிப்படையில் செயல்பட்டால், இன்று நாம் சபைகளில் காணும் எத்தனையோ உராய்வுகளையும், உடைவுகளையும் தடுத்திருக்கலாமல்லவா?

*- R.ஸ்டான்லி BYM*

---

## அனல் வீசும் ஜீவியமே, வலிமையான ஊழியத்திற்கு ஆதாரம்!

*தம்முடைய தாசர்களையே தேவன் ஆதரிக்கிறார்*

வாழ்வின் கடின சூழ்நிலைகளில் '**தன்னையே நம்பி வாழும்**' அவரது சொந்த ஜனங்களை தேவன் ஒருபோதும் கைவிடுவதில்லை! அல்லது, பாராமுகமாய் இருப்பதில்லை! தேவன் கிரியை செய்கிறார், நேற்றும் இன்றும் 'என்றும்' கிரியை செய்கிறார்! அவருடைய **ஜீவனுள்ள**

**திவ்விய வார்த்தை** என் நாவிலிருந்தால், இயற்கைக்கு அப்பாற்பட்ட மாபெரும் செயல்களை தம்முடைய ஆவியின் வல்லமையால் செய்து முடிப்பார். அந்த **ஜீவ வார்த்தையைக் கொண்டு** சத்துருவின் வல்லமையை கட்டவும்! சிறைப்பட்டவர்களின் சிறையிருப்பை விடுதலைச் செய்யவும்! தேவன் நமக்கு அனுகூலம் செய்வார்!

"

**இயேசுவின் ஜீவியம் அல்லது ஜீவன் நமக்குள் இல்லையென்றால், துயரமான ஜனங்களுக்கு, இயேசுவைப்போல் ஜீவன் தர நம்மால் முடியாது. "இயேசுவின் ஜீவனின்றி" பிறருக்கு கொடுக்கும் சுகம், பொய்யானதென்றும், போலியானதென்றும், கூற வேண்டும்!**

பிறரை ஆசீர்வதிப்பதற்கு "தேவன் என்னோடு இருக்க வேண்டும்" என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்! '*சான் பிரான்ஸிஸ் கோவின்*' பிரதான வீதியில், காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது, ஒரு பெரிய கூட்டம் சாலையின் அருகில் கூடியிருப்பதைக் கண்டு நான் காரை நிறுத்தினேன்.

அங்கு ஒரு பையன், கைகளும் கால்களும், உடல் முழுவதும் இழுப்பு நோய் கொண்டு மரண தருவாயில் இருந்தான். அச்சமயத்தில், ஜெபிப்பதற்கு கூட நேரமில்லை! **ஏதாவது கிரியை செய்ய வேண்டும்,** இல்லையென்றால் பையன் செத்துவிடுவான்!! அப்போஸ்தலர்1:8-ல் கூறப்பட்ட **'உன்னதத்தின் பெலனை' நான் சார்ந்து கொண்டு** அந்த பையனின் தோள்பட்டையை தூக்கி வைத்து "இயேசுவின் நாமத்தில், இப்பொழுதே விடுதலை பெறுவாயாக" என கட்டளையிட்டேன். அடுத்த வினாடியே, அந்த பையன் குதித்து எழுந்து, ஓர் சிறிய புன்முறுவலை காண்பித்து விட்டு, கீழே விழுந்து கிடந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு 'பை' எனக்கூறி ஓட்டிச்சென்றான்.

கூடி இருந்த அத்தனை பேரும் வியப்புடன் பையன் போகும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது எப்படி நடந்தது? நான் கைக்கொண்ட சூத்திரம் இதுதான்.... *பரிசுத்தாவியின் ஜீவியம் என்னில் பற்றி எரிந்து கொண்டிருந்தது! அங்கிருந்து வல்லமை பாய்ந்தோடியது! திவ்விய சுகமும் மகிமையும் வெளிப்பட்டது! அவ்வளவுதான்.* தேவை நிறைந்த இந்த உலகத்திற்கு, **இயேசுவின் ஊழியனாய்** நாம் பணி செய்திட இவைகளே நமக்குத் தேவை!

எனவே, கனிகள் நிறைந்த ஜீவியம் பெற்ற திராட்சைக்கொடி, நிச்சயமாய்... செடியாகிய தன் ஆண்டவரிடமிருந்து அவரது வல்லமையை பெற்று ஊழியம் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

*- ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

## ‘பொருள் உதவி விட’ சுவிசேஷம் வழங்குவது மேலானது!

*‘சுவிசேஷ பாரம் இழந்த’ கிறிஸ்தவம் பிழையானது*

இந்த உலகில் ‘ஏழையாய்’ இருப்பவர்களுக்கு உதவ, அனேகர் விரும்புவதற்கு பிரதான காரணம் ‘தங்கள் தர்மத்தை’ எல்லோரும் அறிய, தாரை ஊதி புகழ்தேடுவதே! என இயேசு கூறினார் (மத்.6:2). புறஜாதியார் தொடங்கி, கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் கூட அப்படிச் செய்கிறார்கள். ஆனால் இயேசுவோ “தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே **கர்த்தருடைய ஆவியானவர்** தன்மேல் இருப்பதாக” கூறினார்! (லூக்கா 4:18). உலகின் ‘சர்வ சிருஷ்டியும்’ இயேசுவின் இரட்சிப்பை அறியாத தரித்திரர்களேயாவர். பொருளை விட, ஆத்துமாவின் தரித்திரம் போக்கவே குருவாகிய இயேசுவும், அவரது சீஷர்களும் பிரதானமாய் நாடுவார்கள்! திமிர்வாதக்காரனை சுகமாக்கியதைவிட, அவன் பாவத்தையே முதலாவது இயேசு மன்னித்து, அவனுக்கு இரட்சிப்பை அருளி, ‘எது முக்கியம்?’ எனவும் போதித்தார்!

> **“ ஆகவே “ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்!” என கூறும் வேத வாக்கியம், “தரித்திரர்களுக்கு சுவிசேஷம் கொடுப்பதையே” பிரதானமாய் குறிப்பிடுகின்றது (2கொரி.9:9).**

தரித்திரர்களாகிய நாம், சுவிசேஷம் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், நம்மைச் சுற்றியுள்ள தரித்திரர்களுக்கு நாம் பெற்ற சுவிசேஷத்தை கொடுப்பது நம் தார்மீக நீதியல்லவா?

இயேசுவின் சுவிசேஷம் பெற்றவர்கள் யாவருமே, இந்த தேவ நீதியை உணர்ந்து, அவர்களாகவே மனப்பூர்வமாய் ‘தரித்திரர்களுக்கு’ வாரியிறைப்பார்கள்! தங்களை மீட்ட இரட்சகரின் கட்டளையாதலால், “சுவிசேஷத்தை ஆர்வமுடன்” பிறருக்கு அறிவிப்பார்கள்! அப்படிப்பட்டவர்களின் நீதி, பரிசுத்தம், உத்தமம், கிறிஸ்து வரும்வரை என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்! எப்படியெனில், ஒரு காலத்தில் நாம் வைத்திருந்த தெய்வ பயத்தில் தொய்வு! பரிசுத்தத்தில் ஏற்படும் மந்தநிலை! பெற்ற தாழ்மை மங்கி ஏற்படும் அகந்தை! பணிவிடை சேவையிலிருந்து விலகி ஆளுகை செய்யும் விருப்பம்! உலகத்தை வெறுப்பதிலிருந்து பின்னடைந்து பண ஆசை! ஆகிய பின்மாற்ற சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நடைபெற்று.... அவர்களின் நீதி நிலைநிற்பதில்லை என்ற அவலத்தை, நாம் அனைவரும் எச்சரிக்கையாய் எடுத்துக்கொள்வோமாக!

*- T.ரத்தினகுமார்*

## வைணவ இந்துக்கள் மத்தியில் தியாக ஊழியம் செய்த "மேரி எம்கிளின்"



ஆஸ்திரேலியாவின் 'பெர்ரி' பட்டணத்திலிருந்து, தேவ அழைப்பு பெற்று, தமிழ்நாட்டிலுள்ள, சென்னை சோழலிங்கபுரத்தில் ஐதீகமான இந்துக்கள் மத்தியில் விசுவாசத்தோடு மிக தைரியமாய் ஊழியம் செய்தார் மேரி எம்கிளின்!

சென்னையை அடுத்த சோழலிங்கபுரம், 64 புண்ணியத் தீர்த்தங்களும், 25க்கும் மேற்பட்ட வழிபாட்டுத் தலங்களும் உள்ள இடம். ஒரு காலத்தில் வைணவ ஆலய குருமார்களை பயிற்றுவித்த சமஸ்கிருத கலாசாலை இங்கு செயல்பட்டது. சமய வைராக்கியமுள்ள ஜாதி இந்துக்களின் நகரம் என்றே இதை அழைக்கலாம்.

இப்பகுதியில் அருட்பணி ஆற்றுவது என்பது எளிதல்ல. அக்காலக் கட்டத்தில் குழந்தை திருமணங்கள், ஜாதி போன்றவை வழக்கத்தில் வேரூன்றி இருந்தன!

சிறு குழந்தைகளுக்கு திருமணம் செய்தபின் கணவன் இறந்துபோனால் அக்குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளோ மிகக்கொடூரம்!

குழந்தைகளின் வண்ண உடைகளை களைந்து, வெள்ளாடை உடுத்தி, பூவைக் களைந்து, பொட்டை அழித்து, மொட்டையடித்து, தாலியை அறுத்து, வீட்டிற்குள் ஒரு மூலையில் தள்ளிவிடுவார்கள். இவர்கள் வீட்டைவிட்டு வெளியே வருவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்பட்டது.

மேரி எம்கிளின் இப்பெண்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தார்கள்! அவர், அங்குள்ள அஞ்ஞான மார்க்க கொடுமைகளைக் கண்டு, வேதனையுற்று கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த அரும்பாடுபட்டு ஊழியம் செய்தார்! ஆஸ்திரேலியாவை விட்டு இந்தியா வந்த அவரது ஊழியத்தின் பலனாய் சோழலிங்கபுரத்தை கிறிஸ்துவின் நகரமாக மாற்றத் துணிந்தார். வீட்டில் அடிமைகளாக அடைபட்டுக் கிடந்த பெண்களுக்கு எழுதப்படிக்க கற்றுக்கொடுத்தார். ஜனனா மிஷன் பணி என்ற அமைப்பின் மூலம் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார். வேதபாடங்களும், ஜெபங்களும் அந்தப் பள்ளியில் கற்றுக் கொடுக்கப்பட்டன. இயேசு கிறிஸ்துவை இம்மக்களின் அன்புள்ள நண்பராக்கினார்!

ஆகவே, அன்புள்ளம் கொண்ட அன்னையாக, ஆஸ்திரேலியா பிரிஸ்பித்தேரியன் சபையின் முதல் அருட்பணியாளராக இந்தியா வந்த எம்கிளின், சிறந்த சேவகியாகவும், விசுவாசிகளுக்கு சிறந்த கிறிஸ்தவ பெண்மணி மாதிரியாகவும் வாழ்ந்தார். அவர்களின் சேவை இன்றும் தொடர்வதை, ஆச்சரியமாய் பார்க்கிறோம்!

மூடத்தன அறியாமையால் அடைபட்டுக் கிடக்கும் மக்களை முன்னேற்ற அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்த எம்கிளின் அம்மையார், தன்னையே தியாகம் செய்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே 'கிறிஸ்துவுக்கு அர்ப்பணம்' உன் இளவயதில் தொடங்குவதாக!

கைவிடப்பட்ட ஒரு கூட்ட மக்கள்தான் மோரேவிய தீவினர். மலேரியா தொடங்கி தொழுநோய் வரை அங்கு வியாதிகள் மலிந்து கிடக்கும் சுகாதாரமற்ற ஓர் தீவு!

அனைவராலும் வைவிடப்பட்ட மோரேவிய தீவின்மீது பாரம் கொண்டு, தெய்வ அன்பினால் உந்தப்பட்டு, தியாக ஊழியம் செய்திடவே தேவபக்தன் "கவுண்ட் நிக்கோலஸ் ஸின்ஸெண்டார்ஃப்" என்ற வாலிப இளைஞனை தேவன் அழைத்து தெரிந்து கொண்டார்.

அன்று முதல் இன்று வரை, அனேகர் ஊழியம் செய்து, அங்குள்ள அநேகரை கிறிஸ்துவின் அடியார்களாக மாற்றினர்!

மாபெரும் மோரேவிய ஊழியத்திற்கு அடிகோலியான இந்த உத்தம தாசனின் இருதய மொழிகளைக் கேளுங்கள்! மோரேவிய மிஷனைத் தோற்றுவித்த மாபெரும் தேவபக்தனான கவுண்ட் நிக்கோலஸ் ஸின்ஸெண்டார்ஃப் தன் 4-வயது பாலகனாக இருக்கும்போதே மனந்திரும்பினார். அந்த பாலிய வயதினிலேயே.....

"அன்பான இரட்சகரே, நீர் என்னுடையவராகவும், நான் உம்முடைய வனாகவும் எந்நாளும் இருக்கத் தயைபுரியும்" என்றே எழுதிவைத்தார்!

மேலும், அவரின் வாழ்வில் கூறிய பொன்மொழி வாசகம்:

"எனக்கு ஒரே ஒரு வாஞ்சையுண்டு. அது இயேசு ஒருவரே, ஆம் இயேசு ஒருவர் மாத்திரமே!" என்பதாயிருந்தது.

அவர் ஒரு சமயம் இவ்வாறு கூறினார்:

"நான் ஒரு ஏழைப்பாவி. தேவனின் ஜெயகெம்பீர வண்டியின் பக்க வாட்டிலேயே எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும், அவருடைய நித்திய அன்பின் அடிமை! நான் இவ்வுலகில் ஜீவிக்கும் காலபரியந்தம் இவ்விதமாய் இருந்துவிடவே நான் வாஞ்சிக்கிறேன்" என்று கூறினார்.

இதுவே அன்றி, வேறு யாதொரு நோக்கத்தோடு நான் ஊழியம் செய்தால், அது, லாபகர வியாபாரமேயாகும்! வாலிபனே, நீயும் இந்த உத்தம தாசனின் வாஞ்சையையே பெற்றிருப்பாயாக..... வஞ்சனைக்கு விலகி, உத்தம தேவ பணி செய்திட முன்வருவாயாக!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**